From
செந்தில்குமார் பிரமிளா
3/103, அண்ணா நகர், எலமனூர், திருப்பராய்த்துறை, PO – 639 115
Mobile No – 86086 07033 / 63802 81123

To
மாட்ட கல்வி அதிகாரி
திருச்சி மாவட்டம், பழைய கலெக்டர் அலுவலகம் பின்புறம்
திருச்சி 1

**பத்தாவது படிக்கும் எங்கள் பையனை டிசி கொடுத்து வேற பள்ளிக்கு அனுப்பாமல் அதே பள்ளியில் கல்வியை தொடர அனுமதிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்**

மதிப்பிற்குரிய ஐயா,

நாங்கள் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறோம். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் ஆண் ஒன்று பெண் ஒன்று. இரண்டு குழந்தைகளும் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டம் திருப்பராய்த்துறையில் உள்ளது விவேகானந்தா மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார்கள்.

எங்களது பையன் கதிர் திருப்பராய்த்துறையில் உள்ளது விவேகானந்தா மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் இருந்து தேர்ச்சி பெற்று பத்தாம் வகுப்பு சென்றுள்ளான்.

நாங்கள் மிகவும் ஏழை, தாழ்த்தப்பட்ட வகுப்பினரை சேர்ந்தவர்கள். முக்கம்பில் ஒரு சிறிய ஹோட்டல் கடை நடத்தி வருகிறோம். அதில் தான் எங்கள் குடும்ப வருமானம். எங்களின் எதிர்காலம் எங்கள் குழந்தைகளின் படிப்பாகும்.

எங்க குழந்தைகளை படிக்க வைத்து பையனை மிலிட்டரிக்கு அனுப்பனும், நாட்டுக்கு சேவை பண்ணனும். பொண்ணை டாக்டர் ஆக்கணும்ங்குறது எங்களோட கனவு.

ஜூன் 2ஆம் தேதி இந்த வருடம் பள்ளி துவங்கப்பட்டது, ஆனால் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் எனது பையன் கதிர் பள்ளிக்கு 06 நாட்கள் செல்ல முடியவில்லை.

9ஆம் தேதி எனது பையனை பள்ளிக்கு அனுப்பிய பொழுது ஆசிரியர்கள் அவனை பள்ளிக்குள் அனுமதிக்க மறுத்து விட்டனர். உங்க பையன் இந்த ஸ்கூல்ல படிக்க முடியாது, டிசி வாங்கிட்டு வேற ஸ்கூலுக்கு போங்கன்னு சொல்லிட்டாங்க. உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை, அதுக்காக மருத்துவ சான்றிதழ் கொடுத்தோம், அதையும் வாங்க மறுத்துட்டாங்க.

நாங்க அக்கம் பக்கத்தில் இருக்கிற ஸ்கூல்ல போய் கேட்டோம். அவங்க அந்த மாதிரி சேர்த்துக்க முடியாது, ஏற்கனவே திருப்பராய்த்துறை விவேகானந்தா மேல்நிலைப் பள்ளியில் இருந்து 5-6 குழந்தைகள் இந்த மாதிரி அனுப்பி இருக்காங்க. நீங்க உங்க குழந்தை அங்கயே படிக்க வைங்க, பத்தாவதுல குழந்தையை மாத்துனா சரியா இருக்காது அப்படின்னு சொல்லிட்டாங்க.

அதுக்கப்புறம் நாங்க தினமும் ஸ்கூல்ல போயி அங்குள்ள ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர், நிர்வாக அதிகாரி எல்லார்கிட்டயும் கெஞ்சி கேட்கிறோம், அவங்க கால்ல விழு கூட ரெடியா இருக்கும். ஆனா அவங்க எல்லாரும் டீசி வாங்கிட்டு போயிருங்க, இந்த ஸ்கூல்ல நீங்க படிக்க முடியாது என்கிறார்கள். விரும்பினால் நாங்கள் உங்கள் பையனை ஐடிஐயில் சேர்த்து விடுகிறோம், வேறு பள்ளியில் சேர்த்து விடுகிறோம். இந்த பள்ளியில் படிக்க முடியாது என்கிறார்கள்.

பள்ளியில் என்ன காரணம் சொல்றாங்கன்னா உங்க பையன் ஒழுங்கா படிக்க மாட்டான், ஸ்கூலுக்கு ஒழுங்கா வரமாட்டான், பத்தாவதுல உங்க பையன் பெயில் ஆன எங்கள் பள்ளிக்கு 100% ரிசல்ட்டு கிடைக்காது, அதனால உங்க பையன ஸ்கூல்ல இருந்து நீக்க சொல்லிட்டாங்க, எந்த ஆசிரியரும் உங்க பையன வச்சுக்க விரும்பல அதனால டிசி வாங்கிட்டு போயிருங்க அப்படின்னு சொல்றாங்க.

ஐயா நான் தங்களிடம் கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி, காலில் விழுந்து கெஞ்சி கேட்டுக்கொள்கிறேன், எங்க பையன ஒழுங்கா பள்ளிக்கு அனுப்புவேன் ஐயா, பள்ளிக்கூடம் சொல்ற எல்லா சட்டதிட்டத்துக்கும் கட்டுப்படுகிறோம் ஐயா.

ராத்திரி வரைக்கும் வைக்கிற ஸ்பெஷல் கிளாசுக்கு, லீவுல வைக்கிற ஸ்பெஷல் கிளாசுக்கும் அனுப்புகிறேன் , என்ன சொன்னாலும் கேட்கிறோம் ஐயா. தயவு செய்து எங்க பையனுக்கு டிசி கொடுத்துறாதீங்கய்யா.

தயவு செய்து, எங்க குழந்தைகளோட எதிர்காலத்தை கருதி என்னோட பையன் இந்த ஸ்கூல்ல படிக்க வையுங்கள் என்பது எங்களின் தாழ்மையான வேண்டுகோள்.

தங்கள் உண்மையுள்ள

| | | |
|---|---|---|
| P. செந்தில்குமார் | S. Pramila | S. Kathir |
| பெற்றோர்கள் செந்தில்குமார் | ப்ரிமிளா | மாணவன் கதிர் |

14 – 06 - 2025

# MEDICAL CERTIFICATE

Signature of the Government Servant ______________________

I, Dr. S.KANNAN MBBS DIH after careful personal examination of the case hereby certify that Dr./Sri/Smt./Kum. S. Kathir X STD, Vivekananda Higher Secondary School, Thiruppuraithurai whose signature is given above is suffering from Typhoid fever and consider that a period of absence from duty in the post of Eight days with effect from 31.5.2025 to 7.6.2025 is absolutely necessary for the restoration of his/her health.

7.6.2025

Dr. S. KANNAN, MBBS.,DIH.,
ELANGO NURSING HOME
REGD. No: 51547
JEEYAPURAM - 639 101

Civil Surgeon/Staff Surgeon/
Authorized Medical
Attendant/ Registered
Medical Practitioner

Place: Jeeyapuram
Date 7.6.2025